# எயிட்ஸ்

## வருமுன் காப்போம்

யாழ். பல்கலைக்கழக
சமுதாய மருத்துவத்துறையின்
வெளியீடு

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின்
உதவியுடன் வெளியிடப்படுகிறது

## 1. எயிட்ஸ் என்றால் என்ன ?

- **AIDS – Acquired Immuno Deficiency Syndrome**
- வைரசினால் ஏற்படும் நோய்
- **HIV – Human Immuno Deficiency Virus.** இது மனித நிர்ப்பீடனத்தொகுதியை படிப்படியாக அழிக்கிறது.
- இதன் விளைவாக நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைகின்றது.

## 2. இந்நோய் ஒருவரை எவ்வாறு பாதிக்கின்றது ?

- எமது உடலில் வெண்குருதிக்கலன்கள் நோய் எதிர்ப்பு சக்தியில் பெரும்பங்கு கொள்கிறது.
- இவ்வைரஸ் குருதி, நிணநீர் கலன்களில் தொற்றி விரைவாக பிரிவடைவதுடன் உடலெங்கும் பரவுகிறது.
- இவ்வைரஸ் வெண்குருதிக்கலன்களையும் அவற்றிற்கு உதவும் $CD_4$ உதவிக்கலங்களையும் அழிப்பதனால் நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைகிறது.
- உணவுக்கால்வாய், சுவாசப்பை, தோல் போன்ற பகுதிகளில் பாதகமான தொற்றை ஏற்படுத்தி இறுதியில் மரணத்தை ஏற்படுத்துகிறது.
- அறிகுறிகள் தோன்றுவதற்கு 2 முதல் 12 ஆண்டுகள் வரை எடுக்கலாம்.

## 3. எயிட்ஸ் நோயாளி ஒருவரின் குணங்குறிகள் யாவை?

இதை இருவகையாக பிரிக்கலாம்

### பிரதான குணங்குறிகள்

- 1-2 மாதத்தில் உடல் நிறை **10%** ற்கு மேல் குறைதல்
- ஒரு மாதத்திற்கு மேற்பட்ட தொடர்ச்சியான அல்லது இடைவிட்ட காய்ச்சல்
- ஒரு மாதத்திற்கு மேல் தொடர்ச்சியான வயிற்றோட்டம்.

### சாதாரண குணங்குறிகள்

- இருமல்
- சரும நோய் - இளம்சிவப்பு படர்வுகள்
- வாயின் உட்பகுதியில் வெண்மையான தோல் படர்தல்.
- அதிக களைப்பு
- பசியின்மை
- அதிக வியர்வை, குறிப்பாக இரவு நேரங்களில்
- நிணநீர் கணுக்கள் வீக்கமடைதல்.
- உடல் முழுவதும் புண் கொப்புளங்கள்

## 4. எயிட்ஸ் நோயாளி பின்வரும் நிலைகளில் காணப்படலாம்

### i. ஆரம்ப நிலை

- இது பிறபொருள் எதிரி தோன்ற முன் உள்ள காலம்.
- இந்நிலையில் தொற்றுள்ளவரின் குருதியில் அதிகளவு **HIV** வைரஸ் காணப்படும்.
- இந்நிலை 2 முதல் 12 வாரங்கள் நீடிக்கும்.

பின்வரும் குணங்குறிகள் தோன்றி மறையலாம்.

- காய்ச்சல்
- தலைவலி
- இருமல்
- தொண்டை அழற்சி
- இரவில் வியர்வை
- நிணநீர் சுரப்பிகள் வீக்கமடைதல்

### ii. உறங்கும் நிலை அல்லது மறைந்த நிலை

- எவ்வித குணங்குறிகளும அற்ற நிலையில் நீண்ட நாட்களுக்கு நிணநீர் சுரப்பிகள் வீக்கமடைந்து காணப்படலாம்.

## iii. எயிட்ஸ் சம்மந்தப்பட்ட சிக்கல் நிலை

இந்நிலை ஓரளவு நோய் எதிர்ப்பு சக்தி பாதிக்கப்பட்ட நிலை. எனவே பின்வரும் குணங்குறிகள் காணப்படலாம்.

- வயிற்றோட்டம்
- நிறைகுறைதல்
- அதிக களைப்பு
- தேக அசௌக்கியம்
- காய்சல்
- இரவில் வியர்த்தல்
- வாய்ப்புண்
- மண்ணீரல் வீக்கமடைதல்

மேற்குறிப்பிட்டவற்றில் இரண்டோ அல்லது இரண்டிற்கு மேற்பட்ட குணங்குறிகள் காணப்படுவதுடன் நிணநீர்க்கலங்கள் கணிசமான அளவு குறைந்திருப்பின் குறித்த நபர் எயிட்ஸ் நோயாளி என கருத இடம் உண்டு.

## iv. பூரண எயிட்ஸ் நிலை

இது நோய் எதிர்ப்பு சக்தி அதிகளவு குறைவடைந்த நிலை. மரணத்தை ஏற்படுத்தக் கூடிய நிலை.

புற்று நோய்கள் நரம்பியல் சம்பந்தமான நோய்கள் தோன்றும்.

## 5. எயிட்ஸ் தொற்றுநிலையை எவ்வாறு ஆய்வுகூட பரிசோதனை மூலம் கண்டு பிடிக்கலாம் ?

- எலிசா பரிசோதனை
- வெஸ்டன் பிளொட் சோதனை

இவை எயிட்ஸ் தொற்று நிலையை உறுதிப்படுத்தலாம்.

அத்துடன் பின்வரும் பொதுவான சோதனை முடிவுகளும் **HIV** வைரஸ் தொற்றலை உறுதிப்படுத்த பயன்படுத்தலாம்.

- உதவி நிணநீர் கலங்களின் நூற்று வீத அளவு
- குருதியிலுள்ள வைரசின் அளவுப் பரிசோதனை

## 6. எவ்வாறு எய்ட்ஸ் நோய் கடத்தப்படு கின்றது?

- மனித உடலில் குருதி, விந்து திரவ ஊடகம் மற்றும் மத்திய நரம்பு தொகுதியை சுற்றியுள்ள திரவங்களில் கூடிய செறிவில் **HIV** வைரஸ் காணப்படுகிறது.
- கண்ணீர், உமிழ்நீர், தாய்ப்பால், சிறுநீர், யோனித்திரவம், கருப்பை கழுத்துப் பகுதியில் சுரக்கப்படும் திரவம் போன்றவற்றில் ஓரளவு செறிவில் காணப்படுகிறது.

- மூளை, நிணநீர் முடிச்சுகள், செவ்வென்பு மச்சை போன்ற இடங்களில் குறைந்தள வில் காணப்படுகிறது.

மேற்கூறிய திரவப் பகுதிகளில் காணப்படும் வைரஸ் எவ்வழியிலோ சுகதேகி ஒருவரின் குருதித் தொகுதியை அடையும்போது அவர் எயிட்ஸ் தொற்றுக்கு ஆளாகிறார்.

## 7. எயிட்ஸ் நோய் தொற்றும் வழிமுறைகள் எவை?



பாதுகாப்பற்ற உடலுறவு

எயிட்ஸ் வைரஸ் கொண்ட இரத்தம் ஏற்றல்





தொற்றுள்ள ஊசிகள், முகச்சவர அலகுகள் மூலம்



எயிட்ஸ் நோயுள்ள தாய் மூலம் பிள்ளைக்கு




தொற்றுக்குள்ளான தாயின் தாய்ப்பால் மூலம் (ஆயினும் இச்சாத்தியக் கூறு மிகக் குறைவானதாகும்)

## 8. எவ்வழிகளில் எயிட்ஸ் பரவுவதில்லை?

முகத்தில் முத்தமிடுதல்
கைகளை தொடுதல் அல்லது
குலுக்குதல்





ஓரே கழிவறை அல்லது
குளியலறை பாவித்தல்

கோப்பைகள் தட்டுகள்
ஏனைய தளபாடங்களைப்
பகிர்தல்





மூட்டை பூச்சி, நுளம்பு
என்பவற்றால் கடிபடல்

இருமுதல் தும்முதல்
மூலமாக






ஒன்றாக வாழ்தல்

நோய்க்குட்பட்ட
ஒருவரின் துவாய்கள்,
படுக்கை விரிப்புகளைப்
பாவித்தல் மூலம்



# 9. எயிட்ஸ் பரவுதலை எவ்வாறு தடுக்கலாம்?


பலரோடு உடலுறவு கொள்வதை தவிர்த்தல் ஆணுறை பாவித்தல்






பிறர் பாவித்த ஊசிகள் சவர அலகுகள் பயன்படுத்துவதை தவிர்த்தல்

போதைப்பொருளை நாளமூடாக செலுத்தும் உபகரணங்களை பகிர்தலை தவிர்த்தல்





எயிட்ஸ் கிருமியற்ற குருதி ஏற்றலை உறுதிப்படுத்தல்



எயிட்ஸ்

நோய்க்குட்பட்டிருப்பின்

கருவுறுதலை தவிர்த்தல்

## எயிட்ஸ் நோய்க்கு உட்பட்டவரை அன்பாகப் பராமரிப்போம்

எயிட்ஸ் குணப்படுத்த முடியாதாத போதும் தவிர்த்துக் கொள்ளகூடியது.
இது தனியே சுகாதார பிரச்சனை அல்ல.
சமூகப் பிரச்சனையும் கூட
**எயிட்ஸை வருமுன் காப்போம்**

**இரத்த பரிசோதனை பின்வரும் பாலுறவு நோய் கிளினிக் நடைபெறும் இடங்களில் இலவசமாக செய்து கொள்ளலாம்.**

- கொழும்பு
- களுபோவில
- கட்டுகஸ்தோட்ட
- கரப்பிட்டிய
- மாத்தறை
- குருநாகல்
- கேகாலை
- சிலாபம்
- இரத்தினபுரி
- பதுளை
- யாழ்ப்பாணம்
- அனுராதபுரம்
- பொலநறுவை
- மட்டக்களப்பு
- வவுனியா
- றாகம

வெளியீடு:
சுகாதார கல்விசார் தயாரிப்பலகு
சமுதாய மருத்துவத்துறை.
யாழ் பல்கலைக்கழகம்.
2003

தயாரிப்பு உதவி
அ.கணேசராஜா
மருத்துவ மாணவன
(97 / FM / 10) (4ம் வருடம்)

ராம் பிறின்ரேஸ் 51,இலுப்பையடிச்சந்தி, யாழ்ப்பாணம்.